**Chapter XXIII code (Criminal Procedure)**

**IN THE COURT OF : JUDICIAL MAGISTRATE No.I COURT, NAGAPATTINAM**

Calendar
Miscellaneous

Preliminary Register CC 237/2025

Sessions
Deposition of witness for : PW 5 –LW18

| | | | |
|---|---|---|---|
| Name : | விவேக்ரவிராஜ் – உதவி ஆய்வாளர் | Village /Taluk : | |
| Fathers Name | ரவிச்சந்திரன் | | |
| or Husband Name: | | Age /Calling : | 34/2025 |

Solemnly affirmed in accordance with the provision of Act I of 1872, Chapter X of the day of **12.09.2025**

**எதிரி ஆஜர்.**

**<u>முன் விசாரணை :</u>**

நான் தற்சமயம் நாகப்பட்டினம் நகர காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். நான் கடந்த 05.02.2025 ந் தேதி அரியலூர் ்பெரியார் நகரை சேர்ந்த விஸ்வநாதன் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவை பெற்று நிலைய குற்ற எண். 59/2025 என்ற எண்ணில் இ.த.ச. பிரிவுகள் 281,125(a),106(1) BNS ன் கீழ் வழக்கு பதிவு செய்தேன். **அந்த முதல் தகவல் அறிக்கை அ.த.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** வழக்கு கோப்பினை மேல் விசாரணைக்காக ஆய்வாளர் வேம்பரசி பார்வைக்கு வைத்தேன். ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

காவல் நிலையத்திற்கு மதியம் 1 மணியளவில் தகவல் கிடைத்தது என்றால் சரி. சம்பவ சமயத்தில் தலைமை காவலர் மணிகண்டன் நிலைய பொறுப்பில் இருந்தார். மேற்படி தலைமை காவலர் மணிகண்டன் தான் இறந்து போன நபரை மருத்துவமனையில் சேர்த்தததாக விபத்து பதிவேட்டில் கண்டுள்ளது. சம்பவம் பற்றி காவல் நிலையத்திற்கு 12 மணிக்கு தகவல் கிடைத்து போலீசார் சம்பவ இடத்திற்கு வந்து விட்டார்கள் என்றும்,

மேற்படி தகவலின் படி விபத்தில் இறந்து போன நபர் மட்டுமே  இருசக்கர வாகனத்தில் வந்து தவறுதலாக விழுந்து விபத்து ஏற்படுத்தி கொண்டார் என்றால் சரியல்ல. தலைமை காவலர் மணிகண்டன் புகார் எதுவும் கொடுக்கவில்லை. தலைமை காவலர் மணிகண்டன் புகார் கொடுத்துள்ளார் என்றும் அதில் இறந்து போன நபர் மட்டுமே இருசக்கர வாகனத்தில் வந்து தவறுதலாக விழுந்து விபத்து ஏற்படுத்தி கொண்டார் என்று கூறப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. பின்னிட்டு விபத்து ஏற்பட்ட இடத்தில் வேலை நிமித்தமாக நின்று கொண்டிருந்த டிராக்டரை சம்பந்தபடுத்தி புகார் பெறப்பட்டு பொய் வழக்கு போடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. அதனால் தான் 1 மணிக்கு சம்பவம் பற்றி காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்ததாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. இவ்வழக்கின் புகார் எதிரியை சம்பந்தப்படுத்தியும் கண்ணுற்ற சாடசி வேண்டும் என்பதால்  இருசக்கர வாகனத்தில் இருவர் பயணித்ததாகவும் அவருக்கு காயம் ஏற்பட்டதாகவும் பொய்யாக சொல்லி இவ்வழக்கின் புகார்  உற்பத்தி செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.